Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 22 (08 12 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை 293

## பரீட்சை வினாத்தாள்கள் ஒரு தொகுதி வந்தன

க. பொ. த (சா. த) பரீட்சை வினாத்தாள் பொதிகள் நேற்று மாலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன. பொதிகள் பிரதேச சேகரிப்பு நிலையமாக இயங்கும் புனித ஜோன்பொஸ்கோ பாடசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறையில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் நேற்று பிற்பகல் வினாத்தாள் பொதிகள் யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. நேரசூசிகைப்படி முதல் ஐந்து நாட்களுக்குரிய பாடங்களுக்கு மாத்திரமே வினாத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. மிகுதித் தொகுதி வினாத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிக்கு அரசாங்கம் ஆப்பு

# போரை விஸ்தரிப்பதில் தீவிர அக்கறை

(யாழ்ப்பாணம்)

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு அரசாங்கம் ஆப்பு வைத்துள்ளது. அமைச்சர் தொண்டமானின் சமரஸ முயற்சியை பின் தள்ளி வைத்ததுடன் சிங்கள மக்களின் யாழ். வருகையை திடீரென இடைநிறுத்தியதன் மூலமும், சமாதானம் தோன்றுவதற்கான நல்லெண்ண சூழ்நிலைக்கு அரசாங்கம் திட்ட மிட்ட முறையில் பங்கம் விளைவித்துள்ளது.

அதேவேளை, யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளையும் அரசு ஆரம்பித் துள்ளது. நேற்று அதிகாலை பலாலி முகாமிலிருந்து வடகிழக்கு திசையை நோக்கி முன்னேற முயன்ற படையினரை இடைமறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

## வெளியேறிய படையுடன் புலிகள் கடும் மோதல்

(அச்சுவேலி)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இடைக்காட்டுப் பக்கமாகவும் ஒட்டகப்புலம் பக்கமாகவும் இருமுனைகளில் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. நேற்று அதிகாலை 5 30 மணியளவில் ஆரம்பித்த இம் மோதல் நண்பகல்வரை உக்கிரமாக இடம் பெற்றது.

அதேவேளை மாலைவரையும் தொடர்ந்தும் இடையிடையே மோதல் இடம்பெற்ற வண்ணமாகவும் உள்ளது.

இம் மோதலின்போது இராணுவத்திற்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் பரவலான தாக்குதலில் ஈடுபட்டன. பலாலி முகாமிலிருந்து 120 எம். எம். எறிகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானின் யாழ். வருகை திடீரென ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வர இருந்த அமைச்சர் தொண்டமான் தனது வருகையை திடீரென பின்போட்டுள்ளார். இது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் இக் கடிதம் இன்னும் ஒரு தினங்களில் புலிகளிடம் சேர்க்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

இருபத்தியோராம் திகதி நடைபெறவுள்ள ''சார்க்'' உச்சி மாநாடு தொடர்பான நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபட வேண்டி இருப்பதனாலும், அரசாங்கத் தரப்பினருடனும், அரசியல் கட்சியினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டியிருப்பதினாலும் எதிர்வரும் பத்தாம் திகதி யாழ்ப்பாணம் வர முடியாதிருப்பதாகவும், ஜனவரி மாதம் நடுப்பகுதியளவில் தமது வருகை சாத்தியப்படக் கூடும் எனவும் தொண்டமான் அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது. (ச)

## கண்மூடித்தனமான குண்டு வீச்சு; மக்கள் வெளியேற்றம்

### பலர் காயம்; வீடுகள் நாசம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள்மீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்று அதிகாலை முதல் நண்பகல்வரை மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல் [illegible]

இத்தாக்குதல்களினால் வடிவேல் (வயது 54 அச்சுவேலி) [illegible]

...னேற முயன்ற படையினரை இடைமறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

# தொண்டமானின் யாழ். வருகை திடீரென ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவிருந்த அமைச்சர் தொண்டமான் தனது வருகையை திடீரென பின்போட்டுள்ளார். இது தொடர்பாக அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் இக் கடிதம் இன்னும் ஓரிரு தினங்களில் புலிகளிடம் சேர்க்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

இருபத்தியோராம் திகதி நடைபெறவுள்ள ''சார்க்'' உச்சி மாநாடு தொடர்பான நடவடிக்கைகள் சிலவற்றில் ஈடுபடவேண்டி இருப்பதனாலும், அரசாங்கத் தரப்பினருடனும், அரசியல் கட்சியினருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டியிருப்பதினாலும் மேற்படி திகதி யாழ்ப்பாணம் வர முடியாது இருப்பதாகவும், ஜனவரி மாதம் நடுப்பகுதியளவில் தமது வருகை சாத்தியப்படக் கூடும் எனவும் தொண்டமான் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ச)

# சிங்களவரின் யாழ். விஜயத்திற்கு ராணுவம் தடைவிதித்தது

யுத்தக் கைதிகளாக விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டு கடந்த ஒன்றரை வருட காலமாகப் பராமரிக்கப்பட்டு வரும் நாற்பத்தியொரு சிறிலங்கா பொலிஸாரையும் அவர்களது உறவினர்கள் யாழ் வந்து சந்திப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் வழங்கியிருந்த அனுமதியை கூட்டுப்படை தலைமையகம் தற்பொழுது ரத்துச்செய்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு முப்படைகளின் கூட்டுப்படை தலைமையகம் அனுப்பி வைத்துள்ள செய்தியில், வடபகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கையின் காரணமாகவும், பாதுகாப்பு நிலவரம் காரணமாகவும் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் பொலிஸாரை பார்வையிடுவதற்கு யாழ் வரவிருந்த உறவினர்களின் விஜயம் பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

கூட்டுப் படைத் தலைமையகத்தின் மேற்படி முடிவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கைதிகளின் உறவினர்களுக்கு உடனடியாக அறிவித்தது என்பதை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பத்திரிகைச் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கிறது. விடுதலைப் புலிகளுடன் கூட்டுப்படை தலைமையக அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை மேற்கொண்டு மிக விரைவில் கைதிகளை உறவினர் பார்வையிடுவதற்கான ஒழுங்குகளைச் செய்ய இருப்பதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உறவினர்களுக்கு உறுதியளித்துள்ளது. (ச)

# செஞ். முயற்சி பயனளிக்கவில்லை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள கைதிகளைப் பார்வையிட விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியமை விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் புதிய சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையைத் தோற்றுவிக்க உதவும் என்று ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகம் உறவினரின் யாழ்ப்பாண பயணத்துக்கான அனுமதியை வழங்கி முதலில் ரத்துசெய்ததைத் தொடர்ந்து, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பதில் தலைவர் பிராங்கோயிஸ் பெயின் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனை அணுகியதாகவும் கொழும்பில் ஐலண்ட் செய்தி தெரிவிக்கிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை திரும்ப அகதிகள் அச்சம்

(சென்னை)

தமிழகத்தில் வாழும் சுமார் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் இலங்கைத் தமிழர்கள் மீண்டும் நாடு திரும்பத் தயக்கம் காட்டுவதாகத் தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் மறுவாழ்வு ஆணையாளர் சி. என். ராமதாஸ் கூறியிருக்கிறார்.

மொத்தமுள்ள தமிழ் அகதிகளில் 16,700 அகதிகள் மட்டுமே இலங்கையில் சிறிலங்கா அரசால் அமைக்கப்பட்டிருக்கும் அகதி முகாம்களில் தங்கியிருக்க இணங்கியுள்ளார்கள் என்றும், மிகுதி சுமார் 90,000 இலங்கைத் தமிழ் அகதிகள் சிறிலங்கா அகதிமுகாம்களில் வாழ விரும்பவில்லை என்றும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

(அச்சுவேலி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து இடைக்காட்டுப் பக்கமாகவும் ஒட்டகப்புலம் பக்கமாகவும் இருமுனைகளில் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கு விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது. நேற்று அதிகாலை 5 30 மணியளவில் ஆரம்பித்த இம் மோதல் நண்பகல்வரை உக்கிரமாக இடம்பெற்றது.

அதேவேளை மாலைவரையும் தொடர்ந்தும் இடையிடையே மோதல் இடம்பெற்ற வண்ணமாகவும் உள்ளது:

இம் மோதலின்போது இராணுவத்திற்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும் உலங்கு வானூர்திகளும் பரவலான தாக்குதலில் ஈடுபட்டன: பலாலி முகாமிலிருந்து 120 எம். எம். எறிகணைத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

# கண்மூடித்தனமான குண்டு வீச்சு; மக்கள் வெளியேற்றம்

## பலர் காயம்; வீடுகள் நாசம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள்மீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்று அதிகாலை முதல் நண்பகல்வரை மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பலர்படுகாயமடைந்தனர். கட்டடங்கள், ஆலயங்கள் பலத்த சேதமடைந்தன.

அச்சுவேலி, கதிரிப்பாய், ஒட்டகப்புலம், இடைக்காட்டுப்பகுதி மக்கள் அப்பகுதிகளைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

நேற்று அதிகாலை பலாலிப் பகுதியிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே உக்கிர மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை விமானப்படை விமானங்கள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி தொடர்ச்சியான குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஈடுபட்டன. நண்பகல்வரை நீடித்த இத்தாக்குதல்களினால் சி. நடராசா (வயது 46, இடைக்காடு), ஜெயந்தன் (வயது 23 அச்சுவேலி), செல்லத்துரை (வயது 50 அச்சுவேலி), சின்னையா (வயது 46 தம்பாலை) வடிவேல் (வயது54 அச்சுவேலி) சரஸ்வதி (வயது 30 அச்சுவேலி) சத்தியபாமா (வயது 41 இடைக்காடு) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# உடுப்பிட்டியில் குண்டு வீச்சு ஒருவர் பலி; வீடுகள் சேதம்

(உடுப்பிட்டி)

சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று நண்பகல் உடுப்பிட்டியில் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். பல வீடுகள் சேதமடைந்தன.

உடுப்பிட்டியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் சிறிலங்கா விமானங்கள் இரண்டு குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. அடுத்தடுத்து நான்கு குண்டுகளை இவ் விமானங்கள் வீசின. இத் தாக்குதலில் கந்தவனம் இராசதுரை என்பவர் கொல்லப்பட்டார். ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

# வடக்கில் இராணுவம் திட்டங்களை விரிவு படுத்தும்

## பிரேமதாசா

(வவுனியா)

வடக்கில் ஆயுதப் படையினர் தமது திட்டங்களை மேலும் விரிவு படுத்துவர்; அரசாங்க அதிகாரிகள் பத்து சதுர மைல் பிரதேசத்தில் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டத் தயாராக இருந்தால் பாதுகாப்புப் படையினர் இருநூற்றைம்பது சதுர மைல் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரத் தயாராகஇருப்பார்கள்.

இவ்வாறு நேற்று வவுனியா சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முன்வருமாறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. எம். பிகள் இருவர் பதவிநீக்கம்

(கொழும்பு)

ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்களான ஆரிய ரத்தின ஜெயதிலக எம். ஏ. முத்துபண்டா ஆகிய இருவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம்
[வாய்ந்த ஒரே நிறுவனம்]

92 Dec. O/L

ஆண்டு 6, 7, 8, 9, 10

புதிய வகுப்புக்கள்

ஆரம்பம்:- 09-12-91

மு. குறிப்பு:- O/L 92 DEC. DAY CLASS
புதிய பிரிவுகள் ஆரம்பமாக இருப்பதால் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும். கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தப்படும். (B/3573)


## லொறி ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கெனக் கொண்டு வரப்பட்டு ஹொரணையில் பொலிசாரால் கடந்த மாதம் பதின்நான்காம் திகதி தடுத்து வைக்கப்பட்ட நாற்பத்தைந்து பீப்பா மண்ணெண்ணெயும், லொறியும் அதன் உரிமையாளரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு பெக்கிராவ நீதிவான் முன்பு விசாரணைக்கு வந்தபோது எதிர் தரப்பு சட்டத்தரணியின் விவாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிவான் பாலித பண்டாரநாயக்கா கடந்த வியாழன்று உத்தரவிட்டுள்ளார்.

## இடமாற்றத்தை கண்டித்து மாணவர்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சேவையாற்றிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் திரு. க. இளங்கோ அவர்களின் திடீர் இடமாற்றத்தை கண்டித்தும், மேற்படி இடமாற்றத்தை ரத்து செய்யும்படியும் கோரி இப்பாடசாலையின் மாணவர்கள் மகஜர் ஒன்றை யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த இடமாற்றத்தினால் இப்பாடசாலையில் கல்வி பயிலும் கல்விப் பொதுத்தராதர கணித, விஞ்ஞான மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் ஏமாற்றமடைந்த மாணவர்கள் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகவும்,

இவ் ஆசிரியரின் வெற்றிடத்துக்கு பதில் ஆசிரியர் நியமிக்கப்படினும் மேற்படி ஆசிரியரின் சேவையை ஈடு செய்ய முடியாது என்றும், இவ் ஆசிரியரின் சேவையில் நம்பிக்கை வைத்து நாம் தனியார் கல்வி நிலையங்களை நாடவில்லை என்றும் சுமார் 55 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒப்பமிடப்பட்ட மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது எனவே இடமாற்றத்தை ரத்து செய்து இவ் ஆசிரியரை மீண்டும் தமது பாடசாலைக்கு நியமிக்கும்படி அம்மகஜரில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் இவ்வாசிரியரின் இடமாற்றம் தற்காலிக மாற்றம் என்றும், ஆண்டிறுதியில் இடமாற்றம் செய்யப்பட வேண்டியதற்கான அவசியமில்லை என்றும் ஆசிரியர்கள் தரப்பில் பேசப்படுகிறது.


## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபை

### அறிவித்தல்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதான ஆலயத்தினதும் உட்புற வெளிப்புறச் சுற்றுப் பிரகார ஆலயங்களினதும் (பரிவார ஆலயங்கள்) திருப் பணிகளுக்குப் பணமாகவோ அல்லது பொருளாகவோ நன்கொடைகள் திரட்டுவதற்கு மேற்படி தர்மகர்த்தா சபை எவருக்கும் அதிகாரம் வழங்கவில்லை என்பதை இத்தால் சகல அம்பாள் அடியார்களுக்கும் அன்புடன் அறியத்தருகிறோம்.

பணமாகவோ அன்றிப் பொருளாகவோ திருப் பணிகளுக்கு நன்கொடை வழங்க விரும்பும் அடியார்கள், தர்மகர்த்தா சபைப் பொருளாளரிடம் வழங்கி பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
(R/1989) தேவஸ்தான தர்மகர்த்தாசபை



ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)


## பௌத்த நூதனசாலை இந்தியா உதவி

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகையில் சர்வதேச மட்டத்திலான பௌத்த தேசிய நூதன சாலை ஒன்றை அமைக்க இந்திய அரசாங்கம் உதவவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தலதா மாளிகையின் தியவதன நிலமை நிரஞ்சன் விஜயரத்னவின் ஆலோசனையின் பேரில் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடு சர்வதேச பௌத்த நூதன சாலை நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இரத்தினமலர் அந்தோனிப்பிள்ளை
(வற்றாப்பளை)

தோற்றம் 21-02-1934 மறைவு 08-12-1990

உணவிழந்த ஓராண்டில் உதிரம் பெருகியதும்
கைப்பிடித்த கணவனுந்தன் துணையிழந்த
ஏங்குவதும்
கடைசி மகள் கைப்பிடித்துப் பொற்றாலி
பூண்டதுவும்
பூத்தமகள் முதல் மகனை மடியிருத்திப் பார்ப்பதுவும்
மூத்த புத்திரரிருவர் புதுமனைகள் சேர்ந்ததுவும்
பார்த்திருக்க வாய்ப்பின்றிப் பரமனடி சேர்ந்தாயே!

வற்றாப்பளை, முள்ளியவளை.
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(B/3568)



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

## சரஸ்வதி மில்

இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம்.
நெல் உடைத்தும், தீட்டியும், அரிசி, மிளகாய் போன்ற மா வகைகள் திரித்தும் கொடுக்கப்படும்.

வேலை நேரம்: காலை 8-30 பி.ப 5.30

ஆடியபாதம்வீதி, கொக்குவில் கிழக்கு, (B/3604)



உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்



92ஆம் ஆண்டிற்கான
புதியபிரிவு

## ஆண்டு 5

(புலமைப் பரிசில்
பரீட்சைக்குரிய வகுப்பு)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

ஆண்டு 6 அனுமதி -1992

## அனுமதிப் பரீட்சை

1. 01-02-1981ம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் ஆண்டு 5இல் கல்வி கற்கும் மாணவர்களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

2. பிரவேச விண்ணப்பங்கள் 15-12 91இற்கு முன்



நினைவு

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்



## 92ஆம் ஆண்டிற்கான
## புதியபிரிவு
# ஆண்டு 5

(புலமைப் பரிசில்
பரீட்சைக்குரிய வகுப்பு)

- யாழ் நகரில் அதிக எண்ணிக்கையான மாணவர்களை புலமைப் பரிசிற்குரியவர்களாக்கிய ஆசிரியர் குழு.
- வாரந்தோறும் மாதிரிப் பரீட்சை
- ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த எண்ணிக்கையிலான குறிப்பிட்ட மாணவர்கள்
- 10-12-91 பிற்பகல் 5-00 மணிக்கு முன்னதாக எமது நிறுவனத்தின் ஆரம்பபிரிவில் (UNIVERSAL PRIMARY) பெயர்களை பதிவு செய்யவும்.

அனுமதிப் பரீட்சை: 14 - 12 - 91 (பி.ப. 3-00மணி)

## யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(B/3597)

---

வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

## சரஸ்வதி மில்

இயங்குகிறது என்பதை அறியத் தருகின்றோம்.
நெல் உடைத்தும், தீட்டியும், அரிசி, மிளகாய் போன்ற மா வகைகள் இடித்தும் கொடுக்கப்படும்.

வேலை நேரம்: காலை 8-30 பி.ப 5.30

ஆடியபாதம்வீதி, கொக்குவில் கிழக்கு, (B/3604)

---

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

ஆண்டு 6 அனுமதி -1992

## அனுமதிப் பரீட்சை

1. 01-02-1981ம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் ஆண்டு 5இல் கல்வி கற்கும் மாணவர்களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
2. பிரவேச விண்ணப்பங்கள் 15-12 91இற்கு முன்னதாகப் பணிமனையில் சேர்ப்பித்தல் வேண்டும்.
3. பிரவேசக் கட்டணம் ரூபா 35/-.
4. பரீட்சை 29-12-91இல் நடைபெறும்;

— அதிபர்

B/3602

---

## வெற்றிடங்கள்

### சிறைக்காவலர்

தமிழீழக் காவல் துறையில் சிறைக்காவலர் பதவிக்கு விண்ணப்பங்கள் இருபாலாரிடமும் இருந்து கோரப்படுகின்றன.

தகைமைகள்;

- ஆகக் குறைந்தது எட்டாம் வகுப்பு கல்வித் தகைமை.
- உயரம் 5' 6'' ஆக இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்களுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு நாவலர்வீதியிலுள்ள தமிழீழ காவல் துறையின் தலைமைச் செயலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(B/3600

---

திருமதி
## இரத்தினமலர் அந்தோனிப்பிள்ளை
(வற்றாப்பளை)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21-02-1934 | 08-12-1990 |

உணவிழந்த ஓராண்டில் உதிரம் பெருகியதும்
கைப்பிடித்த கணவனுந்தன் துணையிழந்து
ஏங்குவதும்
கடைசி மகள் கைப்பிடித்துப் பொற்றாலி
பூண்டதுவும்
பூத்தமகள் முதல் மகனை மடியிருத்திப் பார்ப்பதுவும்
மூத்த புத்திரரிருவர் புதுமலர்கள் சேர்த்ததுவும்
பார்த்திருக்க வாய்ப்பின்றிப் பரமனடி சேர்ந்தாயே!

வற்றாப்பளை,
முள்ளியவளை.

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(B/3568)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 12 - 08

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் தேசவிரோதிகள் மேற்கொண்ட துரோகத்தில் சிக்கி வீரச்சாவெய்திய

ரஞ்சன் (மதியாபரணம் தவராஜா பெரிய தம்பனை, பெரியகோவில், மன்னார்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 180, யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த சித்திரா சங்கத் தலைவரான தமிழ்ச் செல்வன்.

1989 ஆம் ஆண்டு யாழ். குடா நாட்டில் பரவலாக இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள் 6 பேர்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## விடுதலைப் புலிகள்
## மக்கள் முன்னணி

(B/3593)

நடத்துவதற்கு இம் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருமாறு அமைச்சர் தொண்டமானுக்கு இறுதியாக அனுப்பி வைத்த கடிதத்தில் அழைப்பு விடுத்துள்ளனர். யாழ். அரச அதிபர் மூலம் நேரடியாக அனுப்பி வைத்துள்ள இக்கடிதத்தில் அமைச்சர் தொண்டமான் கோரியிருந்த 'பிரகடனப் படுத்தப்படாத சண்டை அற்ற நிலை' யில் நடைமுறையில் இக்கல் உள்ளதாகவும் நிரந்தர யுத்த நிறுத்தம் பொருளாதாரத் தடை பற்றியும் பேச்சுவார்த்தை நடாத்த தயார் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதற்கான பதில் இக்கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் வரையில் கிடைக்கப்பெறவில்லை. இதற்கான பதில் எவ்வாறு அமையினும் தொண்டமானின் சமரச முயற்சி பற்றி பலத்த சந்தேகங்களும் இச்சமரச முயற்சி எத்தனைவிற்கு முன்னேற்றமானதாக அமையும் என்பதிலும் தற்பொழுது சந்தேகம் எழுந்துள்ளது.

அமைச்சர் தொண்டமான் இச்சமரச முயற்சியைத் தொடங்கிய போதே இதனைத் தான் ஒரு இ.தொ. காங்கிரசின் தலைவர் என்ற ரீதியிலேயே மேற்கொள்வ...

...சனை குறித்தமாக அமைச்சர் தொண்டமானின் நடவடிக்கைகள் அமைகின்றன எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் தொண்டமா...

...பாக அவர்தான் பதிலளிக்க வேண்டும், எந்த ஒரு அமைச்சரும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல...

> தைப்பொங்கலுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடலாம், தை பிறந்தால் வழி பிறக்கும் என அமைச்சர் தொண்டமான் தெரிவிக்கின்றார். அரசின் அமைச்சரவை சகாக்களோ இராணுவத் தீர்வு பற்றிப் பேசுகின்றனர். தொண்டமான் முயற்சிக்கும் அரசிற்கும் தொடர்பு ஏதும் இல்லை என்கின்றனர். இதனால் தமிழர் தரப்பில் இன்று எழுந்துள்ள கேள்வி அரசாங்கம் இரட்டை வேடம் போடுகின்றதா? அமைச்சர் தொண்டமான் இரட்டை வேடம் போடுகின்றாரா என்பதேயாகும்.

...வின் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சியினர் வினா எழுப்புவதும், குறை கண்டு சொல்வதும் வழமையான ஒரு நடைமுறையாக நாம் ஒதுக்கிவிடினும், அரசாங்க சிவிலதும் இராணுவத்தினதும் நடவடிக்கைகளும் சமரச முயற்சிகள் பற்றி கேள்விக்குறியை தெளிவாக எழுப்பியுள்ளன.

### அலட்டிக்கொள்ளத் தேவையில்லை

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் நிதி அமைச்சரும்...

...கிருப்பது குறித்து அரசாங்கத்திற்குத் தெரியாது. இது தொடர்பாக அமைச்சரவையில் பேசப்படவுமில்லை எனத் தெரிவித்ததோடு புலிகள் தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கையில் எதுவித மாற்றமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

### தொடரும் இராணுவ நடவடிக்கை

அரசாங்கத் தரப்பில் அமைச்சர் தொண்டமான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று அரசியல்வாதிகள் இவ்வாறு வற்புறுத்தி...

...திற்கு 15 கிலோ மீற்றர் தூரத்திலேயே உள்ளோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் வடபகுதி எமது பூரண கட்டுப்பாட்டில் வந்துவிடும்' என கூட்டுப்படைகளின் நடவடிக்கைப் பொறுப்பதிகாரி ஹமில்டன் வனசிங்கா தெரிவித்துள்ளார்.

### பேச்சிற்கான சூழலில்லை

அத்தோடு இராணுவத் தரப்பும், அரசாங்கத் தரப்பும் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குவதாகவும் இல்லை. ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி பூநகரிப் பாதையை இராணுவம் மூடியதில் இருந்து யாழ். குடா நாட்டிற்கான போக்குவரத்துப் பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டன. யாழ். குடா நாட்டிற்கான உணவு விநியோகமும் தடைப்பட்டது.

இவ் உணவு விநியோகத்தை சீர்செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் எவையும் இதுவரை கைகூடவில்லை. மக்களுக்கு உணவு கிடைக்கச் செய்தல் ஒன்றுமட்டுமே நோக்கமாகக் கொண்டு விடுதலைப் புலிகள் காங்கேசன்துறைத் துறைமுகத்தை திறந்துவிடுவதற்குச் சம்மதித்த வேளையிலும் இராணுவம் திட்டமிட்டு இதனைத்...

...விட்டதாக அபிப்பிராயம் உருவாகிவிடக் கூடாது என்பதில் இவர்கள் இருவரும் அக்கறையாக இருப்பதையே காட்டுகின்றது.

### அரசின் இரட்டை வேடம்

இந்நிலையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கம் இரட்டைவேடம் போடுவதாகவே உணர முடிகிறது. பேச்சுவார்த்தைகள் அரசின் தீர்வு ஒன்றைப் பற்றி அரசாங்கம் பேசினாலும், இராணுவத் தீர்வு ஒன்றே அரசாங்கத்தின் அடிப்படைத் திட்டமாக உள்ளது.

### இராணுவ தயாரிப்பிற்கு காலம் தேவை

இதில் யாழ். குடா நாட்டின் ஒரு பகுதியையாயினும் கைப்பற்றுவது அரசாங்கத்தின் நோக்கமாகும். இதற்கான தயாரிப்புக்களில் இராணுவம் ஈடுபட்டுள்ளது. இதற்குச் சில கால அவகாசமும் இராணுவத்திற்குத் தேவையாக உள்ளது.

யாழ். நகரத்திற்கு 1.5 கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கின்றோம். சீனாவிடம் இருந்தும் செக்கோசெலவோக்கியா...

...படையின் பலன் காட்டிற்று வாகனங்களுக்கு இடையூறாக இருக்கும் என்பதனால் சீரான வானிலை உருவாகும் வரையும் பொறுத்திருக்க இராணுவத் தரப்பு திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந் நிலையில் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் ஆக்கபூர்வமான பலனை ஏதும் ஏற்படுத்துமா என்பது சந்தேகத்திற்குரியதே. இதே வேளை, திரு. தொண்டமான் அமைச்சரவையின் அங்கமாக பேச்சுவார்த்தையை நடத்தவில்லை என அரச தரப்பு தெரிவிப்பினும் திரு தொண்டமானை அமைச்சரவையின் ஒரு அங்கமாக தமிழர் தரப்பு நோக்குவதும் தவறாகாது. இந் நிலையில் அவரின் நடவடிக்கைகள் இராணுவத்திற்கு ஒரு கால அவகாசத்தைப் பெறும் முயற்சி எனச் சந்தேகிப்பின் அதில் தவறு ஏதும் இருப்பதாகக் கூறுவதற்கும் இல்லை.

- ஜெயா

---

### தோட்டங்களில் 'பயங்கரவாதிகள்'

## கைது செய்யப்படுபவர்கள் அப்பாவித் தொழிலாளர்கள்

(பதுளை)

பதுளை, பசறை பகுதிகளில் பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களும் நகரங்களில் வசிப்பவர்களுமாகும் என்று இலங்கைத் தொழிலாளர் சங்கத்தின் காரியாலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டோர்களில் பெரும்பாலானவர்கள் 1977 ஆம் ஆண்டிலும், 1983 ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற வன்செயல்களைத் தொடர்ந்து அகதிகளாக கிழக்குமாகாணத்தில் உள்ள புல்லுமலை, சின்ன புல்லுமலை, செங்கலடி. மட்டக்களப்பு போன்ற இன்னும் பல இடங்களில் அகதிகளாக தஞ்சமடைந்து குடியேறியவர்களாகும். இவ்வாறானவர்களே தற்போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனவே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின் விடுதலை செய்யவேண்டும். என்றும் தாம் வேண்டுவதாக அந்தக் காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொருள்களின் விலை மேலும் குறையும்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணை, சவர்க்காரம் போன்ற பொருட்கள் வரியான் பாதையூடாக குடாநாட்டிற்குள் பெருமளவில் எடுத்துவரப்படுகின்றன. தனியார் வர்த்தகர்களின் முயற்சியால் எடுத்துவரப்படும் இப்பொருள்கள் இவ்வாடு யாழ். அரச செயலகத்துக்கு அரசு அனுப்பிவைத்த மேற்படி பொருட்களை விட அதிகம் என்று கூறப்படுகிறது இதனால் மேற்படி பொருள்களின் விலைகளில் மேலும் சரிவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

### வெளிவந்துள்ளது

'நவீன' உளவியல் சஞ்சிகையின் ஐப்பசி-மார்கழி 1991 க்கான இதழ் தற்போது வெளிவந்துள்ளது. நவீன உளவியலின் தொடுவானம், கட்டிளைஞர் பிரச்சினைகள், உளஆற்றுப்படுத்தல் என்பன போன்ற பல்வேறு விடயங்களைத் தாங்கி வெளிவந்துள்ள இவ்விதழ் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது.

### பார்வைக்கு

ஆரம்ப ஆசிரியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரிய விளம்பரம் வெளியிடப்பட்டிருக்கும் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை பருத்தித்துறைப் பிரதேச சபை அலுவலகம் பொதுசன நூலகத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதாக பொதுசன நூலகர் ஆ. சிறீசெல்வம் அறிவித்துள்ளார் (25)

## ஆனையிறவில் ஏற்றுமதிக்கு உப்பு உற்பத்தித் திட்டம்

ஆனையிறவில் வெளிநாட்டவரின் உதவியுடன் ஏற்றுமதித் தரம்வாய்ந்த 10 இலட்சம் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுமென கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். 1969 இல் பிரெஞ்சு நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். வழமையாக அங்கு உற்பத்தியாகும் உப்பு ஏற்றுமதித்தரம் வாய்ந்தது எனமேலும் அவர் தெரிவித்தார்

## உ. பிரதேச சட்டசபை ஜனதா தளத்தில் பிளவு

(டில்லி)

உத்தரப் பிரதேச சட்டப் பேரவை சபாநாயகர் உத்தரப் பிரதேசசட்டப் பேரவையில் ஜனதா தள் கட்சி இரண்டாகப் பிரிந்து விட்டது என்று நேற்றுக் கூறினார். இனி கைலாச நாத் யாதவ் தலைமையில் குழு ஜனதா தள் 'ஏ' என்றும், ரேவதி ரமண்சிங் தலைமையில் உள்ள குழு ஜனதா தள் 'பி' என்றும் அழைக்கப்படும் என்றார்.

(டில்லி)

இந்திய - சோவியத் உறவுகள் அமைதியான முறையில் மாற்றத்திற்கு உட்படும்'' என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். ''மொஸ்கோவில் ஏற்பட்டுள்ள அரசியல் பூகம்பங்கள் இதனை அவசியமாக்கியுள்ளன. இந்திய - சோவியத் ஒப்பந்தங்கள் புனரமைப்புச் செய்யப்படும்.'

இந்தியாவின் வர்த்தகப் பங்காளியாகவும் ஆயுத விநியோகஸ்தராகவும் சோவியத் யூனியன் மாத்திரம் இருக்கவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகளுடனும் பிரிட்டனுடனும் இந்தியா முக்கியமான ஒத்துழைப்புகளை மேற்கொண்டிருந்தது. இந்நிலையில் இந்தியாவில் நிகழ்ந்துவரும் முக்கியமான பொருளாதார மாற்றங்களுக்கு இணங்க பல துறைகள் தொடர்பாக சாத்தியமான வழிகள் இருக்கின்றன'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

## - நரசிம்மராவ்

## காஷ்மீரில் இராணுவம் 45 வீடுகளை கொளுத்தியது

(காஷ்மீர்)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும், இந்திய பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் பின் 45 வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்புப் படையினர் வேண்டுமென்றே தீவைத்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தில் 2 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு 5 பேர் காயமடைந்துள்ளனர்.

## புள்ளிவிபரத் திணைக்களத்தில் பதவி வெற்றிடங்கள்

புள்ளிவிபரத் திணைக்களத்தில் தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

குறிப்பாக ''புள்ளி விபர ஆய்வாளர்'' பதவிவெற்றிடங்களை முதற்கட்டமாக நிரப்பவிருக்கிறது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தூயகணிதம், பிரயோககணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

## 42 குடும்பங்களுக்கு ஒரேநாளில் திருமணப்பதிவு

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள உடுப்பிட்டி மாலடிக்கிராமத்தில் திருமணப்பதிவின்றிக் குடும்பம் நடாத்தி வந்த 42 குடும்பங்களுக்கு ஒரே நாளில் திருமணப்பதிவுகளை யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகால நடாத்தி, திருமணச் சான்றிதழ்களையும் வழங்கி வைத்துள்ளார்.

பராசக்தி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இத்திருமணப்பதிவுகளை பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர்திரு. எஸ் மாணிக்கவாசகர், பதிவாளர்களான திரு. ச. வரகுணப்பிரகாசம், திரு. க. கந்தசாமி ஆகியோர் மேற்கொண்டனர். இத்திருமணப்பதிவுகளுக்கான நடவடிக்கைகளை யாழ். உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகஸ்தர் திரு எஸ். இராசையா மேற்கொண்டிருந்தார். (25

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' கணிமனையில் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஐம்பதைந்தையும் ஏற்படுத்தமுன் வருமாறு தான் விடுதலைப் புலிகளை எப்போதும் கேட்டு வந்திருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் வவுனியாப் பகுதியில் சிவில் நிர்வாகத்தைப் பேண ஆலோசனைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார், மேலும் வடக்கில் காங்கேசன்துறைப் பகுதியை மையமாகக் கொண்ட விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவித்தார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் பாதுகாப்பு படையினர் தமது துணிச்சலான முயற்சிகளின் மூலம் பெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளனர் எனவும், வடக்கு, கிழக்கு பகுதிகளில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமெனவும் குறிப்பிட்டார்.

## பயிற்சிப் பட்டறை

எதிர்வரும் 11, 12ஆம்திகதிகளான புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சிறுபிள்ளைகளின் வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிப்பட்டறை ஒன்று நடைபெறவுள்ளது. இப்பயிற்சிப் பட்டறை கலாநிதி மா. சின்னத்தம்பி அவர்களால் நடாத்தப்படும்.

இதில் பங்குபற்ற ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்களையும் மற்றும் பொதுமக்களையும் தமிழீழ ஆய்வு நிறுவன தாவடியிலுள்ள அலுவலகத்தில் பெயர் விபரங்களைப் பதிவுசெய்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

---

இலங்கை

அவர் குறிப்பிட்டார். ஆனால் ஐ. நா. சபை அகதிமுகாம்களை அமைத்து அகதிகளை பராமரிக்க விரும்பினால் மட்டுமே தமிழ் அகதிகள் அனைவரும் இலங்கை திரும்ப முன்வரக் கூடும் என்றும் ராமதாஸ் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசால் ஏற்படுத்தப்படும் முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகள் வாழ்ந்தால் அரச அதிகாரிகளே தமக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கக் கூடும் என்று தமிழ் அகதிகள் அச்சம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

ளையானவது போன்ற விடயங்களில் பத்துமாதப் பயிற்சி கப்பட்டிருப்பதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

## மரக்கறி செய்கையில் பலாலி இராணுவம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்குப் பகுதியிலுள்ள வயல்களில் சிறிலங்கா இராணுவத்தினர் உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த வேலைகளைக் கவனிப்பதற்காக தனி சமான படையினர் சேவையில் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். மரக்கறி வகைகளையே பெருமளவில் படையினர் செய்கை பண்ணிவருகின்றனர். (ஈ)

## நடுவர் மன்ற தீர்ப்பை கசெற்றில் வெளியிடவும்

(கோயம்புத்தூர்)

'காவிரிநீர் பங்கீடு தொடர்பான நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பை மத்திய அரசு அரசு இதழில் (கசெற்) வெளியிடவேண்டும்' என மத்திய சட்ட நீதித்துறை அமைச்சர் திரு. குமாரமங்கலம் செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

கர்நாடக அரசின் வேண்டுதலுக்கு இணங்க வரும் வெள்ளிக்கிழமை இத் தீர்ப்பு மீள்பரிசீலனை செய்யப்பட உள்ளது. 'தீர்ப்பில் மாற்றம் எதுவும் இருப்பின் அதனை மீண்டும் அரசு இதழில் வெளியிடலாம் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## குமாரமங்கலம்

## அடையாள அட்டைக்கு பதில் உறுதிப்படுத்திய புகைப்படம்

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் க.பொ.த. (சா) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது அடையாள அட்டைக்குப் பதிலாக அத்தாட்சிப் படுத்தப்பட்ட புகைப்படங்களை ஏற்றுக்கொள்ளும்படி சகல பரீட்சை மேற்பார்வையாளர்களையும் பரீட்சை ஆணையாளர் நாயகம் பணித்துள்ளார்.

கிராமசேவை அதிகாரிகள் அல்லது உதவி அரசாங்க அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் அடையாள அட்டைக்குப்பதிலாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் காயம்

(கிளிநொச்சி)

சைக்கிளில் சென்ற குடும்பஸ்தரை யானை தூக்கி வீசியதில் படுகாயமடைந்தார். இவருடன் சென்ற சிறுவன் மயிரிழையில் தப்பினான்.

நேற்றுமுன்தினம் மாலை கிளிநொச்சி தெங்பானப் பகுதியில் சோ. மாணிக்கம் (43) என்பவர் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த யானை ஒன்று அவரை தும்பிக்கையால் தூக்கிச் சிலமார் தூரம் கொண்டுசென்ற பின் வீசி எறிந்தது. இதன்போது சைக்கிளின் பின் பகுதியிலிருந்த அவரது நான்கு வயது மகன் அருகிலுள்ள பற்றைக்குள் பதுங்கிக் கூக்குரலிட்டான். இதனைக்கேட்ட அயலவர் ஓடிவரவே யானை மேற்படி நபரை வீசிவிட்டுச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

---

கண்மூடித்தனமான

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் இருந்த பல கடைகள், ஆலயங்கள், வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

பொதுமக்களின் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

---

ஐ. தே. க.

ரும் ஐ. தே. க. விலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கெதிரான அரசியல் குற்றமனு விடயத்தில் கையொப்பமிட்டமை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு எதிரான இயக்கத்தில் பங்குபற்றியமை, கட்சியிலிருந்து விலக்கப்பட்ட 8 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு வைத்திருந்தமை, சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமை, என இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கென நடைபெற்ற ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் இவர்கள் இருவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

---

செஞ். முயற்சி

கின்றன. சடைசியில் பாதுகாப்புக் காரணம் காட்டி அனுமதி மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தமனித நேயப் பயணம் தொடர்பாக அரசுடன் நடந்த பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்களை வெளியிட பிரான்கோயிஸ் பெயின் மறுத்துவிட்டார். இப்பேற்பட்ட மனித நேயப் பணிகளில் ஒரு சுமுகமான இணக்கம் அடையும் வரை முடிவை வெளியிடுவது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழக்கத்துக்கு மாறானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வெற்றாக பிரிகளிக்கலாந்து சென்றிருப்பதால் பதில் கடமைகளைப் பிரான்கோயிஸ் பெயின் செய்து வருகிறார்.